17.10.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.107/2018

அ.சா.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீத்தாராமன் | | |
| த/பெ | ராமலிங்கம் | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 44/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். நான் ஏற்கனவே பங்க் கடை மற்றும் கூல்ட்ரிங்ஸ் கடை வைத்து நடத்தி வந்தேன். அந்த கடை ரேசன் கடைக்கு எதிரில் அமைந்துள்ளது. எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது கடையில் பாக்கு சிகரெட், கூல்ரிங்க்ஸ் ஆகியவை வாங்குவார்கள். நான் கடையை விட்டு வெளியில் வந்தது இல்லை. எதிரிகளுடன் தண்ணி அடித்தது இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. வழக்கறிஞர் ஆறுமுகம் எப்படி இறந்தார் என்றும் எனக்கு தெரியாது. முருகன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

காவல் துறை விசாரணையில் நான் எதிரிகள் எனது கடையில் சிகரெட், பாக்கு, கூல்ரிங்க்ஸ் வாங்குவது வழக்கம் என்றும், எதிரிகளுடன் நான் சரக்கு சாப்பிடுவது வழக்கம் என்றும், அவ்வாறு சரக்கு வாங்கி கொடுத்து சாப்பிடும் போது வழக்கறிஞர் கொலை வழக்கு சம்மந்தமாக விசாரணைக்கு வரப்போவதாகவும், அந்த வழக்கில் வழக்கறிஞர் ஆறுமுகத்தின்

அண்ணன் முருகன் ஒரு முக்கிய சாட்சி என்றும், அவரை சமாதானமாக போக சொன்னால் அவர் ஒத்துவராமல் தொந்தரவு கொடுத்து வருகிறார் என்றும், அப்போது 1ம் எதிரி வழக்கறிஞர் ஆறுமுகத்தை போட்டது போல் முருகனை போடனும் என்றும், அப்போது தான் ஒரு வழி பிறக்கும் என்றும், சொல்லி வந்தார் என்றும், கடந்த 28.08.2014ந் தேதி இரவு 9 மணியளவில் 1ம் எதிரி ராதாகிருஷ்ணன் என்னை கூப்பிட்டார் என்றும், நான் போனேன் என்றும், அங்கே சத்தியசீலன், ரகு, அன்பரசு, புகழேந்தி, பிரதாப், சிலம்பரசன், சிவக்குமார், அசோக்குமார், கோபாலகிருஷ்ணன், வினாயகமூர்த்தி, ராதாகிருஷ்ணன் எல்லோரும் இருந்தார்கள் என்றும், எங்கள் அனைவருக்கும் 1ம் எதிரி ஏற்கனவே வாங்கி வைத்திருந்த பிராந்தி பாட்டிலை கொடுத்து குடிக்க சொன்னார் என்றும், நாங்களும் குடித்தோம் என்றும், அந்த நேரத்தில் எங்களுக்கு எதிர்த்தாற்போல் சீத்தாராமன் அண்ணன் கடையில் இருந்து சிகரெட், பாக்கு, கேக் ஆகியவற்றை எடுத்து வரச்சொன்னார் என்றும், சீத்தாராமன் எடுத்து வந்து எங்களுடன் சரக்கு சாப்பிட்டார் என்றும், அப்போது 1ம் எதிரி ஆறுமுகம் கொலை வழக்கில் 08.09.2014ந் தேதி விசாரணைக்கு வந்தது என்றும், அன்றைக்கு முருகன் சாட்சி சொல்லிட்டா எனக்கு தண்டணை உறுதியாகிவிடும் என்றும், நான் உங்களுடன் உட்கார்ந்து தண்ணி அடிக்க முடியாது என்றும், இது தான் கடைசியாக உங்களுடன் உட்கார்ந்து தண்ணி அடிக்கிறேன் என்று சொல்லி உருக்கமாக பேசினார் என்றும் , உடனே ரகு நீ எப்போது தண்ணி அடித்தாலும் உளறுவதை வேலையாக வைத்திருக்கிறாய் என்றும் சொன்னார் என்றும், வினாயகமூர்த்தி ராதாகிருஷ்ணனை பார்த்து உன்னை எங்களிடமிருந்து பிரிக்க முடியாது என்றும் அப்படி யாராவது பிரிக்க நினைத்தால் அவர்களை சும்மா விடமாட்டோம் என்றும் சொன்னார்கள் என்றும், அங்கிருந்தவர்களை எல்லாம் ஒன்று சேர்ந்து முருகனை ராதாகிருஷ்ணனுக்காக முருகனை கொலை செய்ய வேண்டும் என்று முடிவு பண்னோம் என்றும், அப்போது ராதாகிருஷ்ணன் என்னிடம் கொடுத்து மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வரச்சொன்னார் என்றும் நான் கத்தியை எடுத்து வந்தோம் என்றும், சிவா தெரு விளக்கை நிறுத்தி விட்டு அனைவரும் புறப்பட்டு சென்று திட்டம் போட்டபடி முருகன் தலையை அன்பரசு பிடித்துக்கொள்ள கால்களை சத்தியசீலனும், புகழேந்தியும் பிடித்துக்கொள்ள கோபாலகிருஷ்ணன் முருகன் மேல் உட்கார்ந்து அவனது இரண்டு கைகளையும் திமிரவிடாமல் பிடித்துக்கொண்டு ரகு, ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் வெட்டியதாகவும், மற்றவர்கள் பாதுகாப்பாக நின்றுக்கொண்டு முருகனை

வெட்டுங்கடா, வெட்டுங்கடா என்று ஆவேசமாக கத்தியதாகவும், அதன் பிறகு எல்லோரும் ஓடிவிட்டார்கள் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எதிரி வீட்டின் முன்பு எதிரி கொலைக்கு பயன்படுத்திய கத்தி மற்றும் அவரது வீட்டிலிருந்த ஆடைகளை கடந்த 04.10.2014ந் தேதி பகல் 2.15 மணிக்கு போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த மகசரில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் அனைவரும் சொந்தஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

மறுவிசாரணை

**இல்லை**